
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1132

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

161

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...





# நிதிநுட்ப நகரம்!

## வர்த்தகப் பாய்ச்சலுக்குத் தயாராகும் தமிழ்நாடு!

2021-ஆம் ஆண்டில், கொரோனா ஊரடங்கு, முந்தைய ஆட்சியாளர்களின் 10 ஆண்டுக்கால நிர்வாகச் சீர்கேடுகள் எனப் பல நெருக்கடிகளுடன் ஆட்சியில் அமர்ந்தது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில், புதுமை முயற்சிகளுக்கான திராவிட மாடல் அரசு. இந்தியாவில் பணமதிப்பு நீக்கம் என்கிற பெயரில், ஒன்றிய அரசு உருவாக்கியிருந்த செயற்கைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வந்த நேரத்தில், கொரோனா ஊரடங்கு காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தம், புதிய ஆட்சி நிர்வாகத்துக்குப் பெரும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அனைத்துத் தடைகளையும் தகர்த்து, இன்று இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, எதிர்கால இலக்குகளை நிர்ணயித்தும் திட்டங்களைத் தீட்டியும் வருகிறது. அப்படி, தமிழ்நாட்டின் எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த உள்ள ஒரு திட்டம்தான் நிதிநுட்ப நகரம்.

### நிதிநுட்ப நகரம்

2021-22 -ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்போது, அன்றைய நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாட்டின் நிதிநுட்ப வளர்ச்சியை முன்னெடுக்கும் வகையில் நிதிநுட்பக் கொள்கை வெளியிடப்படும் என்றும், சென்னையில் இரண்டு கட்டங்களாக நந்தம்பாக்கம், காவனூரில் நிதிநுட்ப நகரம் (FINTECH CITY) உருவாக்கப்படும் என்றும் அறிவித்தார். முதற்கட்டமாக நந்தம்பாக்கத்தில் ரூ.165 கோடியில் நிதிநுட்ப நகரம் உருவாக்கப்படும் என்றும் நிதிநிலை அறிவிப்பில் வெளியிடப்பட்டது.

நிதிநுட்ப நகரம் என்பது நிதிச்சேவைகள் மற்றும் நிதிச்சேவை தொழில்நுட்பங்களை அளிக்கும் நிறுவனங்கள் ஒன்றாகச் செயல்படும் ஒரு சிறப்பு அலுவலக வளாகம் அல்லது ஐ.டி. மையமாகத் திகழும். திராவிட மாடல் அரசு உலக அளவிலான முதலீடுகளை திரட்டிவரும் நிலையில், அந்த முயற்சிகளுக்கு வலிமை சேர்க்கும் வகையில், இந்த நிதிநுட்ப நகரம் இயங்கும். இதற்கான வரைவுகள் இறுதி செய்யப்பட்டு, 2023 ஜூன் மாதம் 17-ஆம் தேதி, நிதிநுட்ப நகரத்துக்கான அடிக்கல் நாட்டினார் நம் முதலமைச்சர் அவர்கள்.

சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் வர்த்தக மையம் அருகே, இந்த நிதிநுட்ப நகரம் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 56 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டது. இந்த நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.56 லட்சம் சதுர அடியில் நிதிநுட்ப நகர கோபுரம் 11 மாடிக் கட்டடம் அமைக்க பணிகள் தொடங்கப்பட்டன. குறிப்பாக, அங்கு பணிபுரிய உள்ளவர்களுக்கான குடியிருப்பு வசதிகள், உணவகங்கள் அமைக்கவும் பணிகள் தொடங்கப்பட்டன. முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் இணைந்து பணியாற்றும் வகையில், நிதிநுட்ப நிறுவனங்களுக்கான வசதிகளுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.

### நாட்டுக்கு அர்ப்பணிப்பு

வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், முதலீட்டு நிறுவனங்கள், மின்னணு பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், பங்குச்சந்தை சார்ந்து இயங்கும் நிறுவனங்கள் இந்த நிதிநுட்ப கோபுரத்தில் இடம்பெற உள்ளன. நிதிச் சேவைகள் அனைத்தும் ஏழைகள், நடுத்தர மக்களுக்கும் விரைவாக சேர வேண்டும் என்பதே எல்லார்க்கும் எல்லாம் என இயங்கும் அரசின் இலக்கு என, அந்த நகரத்துக்கு அடிக்கல் நாட்டுகையில் குறிப்பிட்டார் நம் முதலமைச்சர்.




2.26 ஏக்கரில் கட்டடப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில், கடந்த 02.03.2026 அன்று நாட்டுக்கு அர்ப்பணித்தார் நம் முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் அவர்கள்.

உலகப் பொருளாதாரமே மின்னணு மயமாக மாறிக் கொண்டிருக்கும் நிலையில், அதன் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்க வேண்டும் என எதிர்கால இலக்கோடு அமைக்கப்பட்டுள்ள நிதிநுட்ப நகரத்தின் முதற்படிதான் இந்த நிதிநுட்ப கோபுரம். அந்த நகரம் ஈர்க்க உள்ள முதலீடும், உருவாக்க உள்ள வேலை வாய்ப்புகளும் எண்ணிக்கைகளைத் தாண்டி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்க உள்ளது.

> “அமெரிக்காவில் வால் ஸ்ட்ரீட், மும்பையில் தலால் தெரு போன்றவை நிதி வர்த்தகச் சேவைகளின் மையமான இடங்களாக புகழ்பெற்றதற்குப் பின்னால், ஓர் இலக்கு இருந்தது. அதுபோன்றதொரு இலக்குதான் நிதிநுட்ப நகரம். அதன் முதற்படியை நிதிநுட்ப கோபுரமாகத் தொடங்கி வைத்துள்ளது திராவிட மாடல் அரசு.”

இந்த நிதிநுட்ப நகரம் முழுமையாக செயல்படத் தொடங்கும் நாளில், சென்னை உலக வர்த்தகத்தின் முக்கியமான மையமாகத் திகழும். அமெரிக்காவில் வால் ஸ்ட்ரீட், மும்பையில் தலால் தெரு போன்றவை நிதி வர்த்தகச் சேவைகளின் மையமான இடங்களாக புகழ்பெற்றதற்குப் பின்னால், ஓர் இலக்கு இருந்தது. அதுபோன்றதொரு இலக்குதான் நிதிநுட்ப நகரம். அதன் முதற்படியை நிதிநுட்ப கோபுரமாகத் தொடங்கி வைத்துள்ளது திராவிட மாடல் அரசு. சமூகநீதி வளர்ச்சி மாடல், பொருளாதார வலிமையுடன் இயங்குவதற்கு அடித்தளம், இந்த நிதிநுட்ப கோபுரம் என்றால் மிகையில்லை.

...சாதனை தொடரும்

## ‘அவர்கள் வயிறெரிந்தே சாகட்டும்!’

நான் முதல்வன் திட்டத்தில் பயன் பெற்றோர் குடிமைப்பணி தேர்வுகளில் பெற்றுள்ள வெற்றியை, ‘டுட்டோரியல்’ திட்டம் எனச் சிலர் விமர்சித்த நிலையில், அதற்குப் பதில் அளிக்கும் வகையில் முகநூலில் கருத்தைப் பதிவு செய்துள்ளார், எழுத்தாளர் பாலசுப்பிரமணியம் முத்துசாமி. அவரது பதிவிலிருந்து...

“முகநூல் கூறும் நல்லுலகில் ஒரு சட்ட வல்லுநர் இருக்கார். ஒரு அமெரிக்க அறிவுஜீவி இருக்கார். இரண்டு பேருக்கும் ஒரே வேலை. காலையில எழுந்ததும் தமிழ்நாட்டுல ஏதாவது நல்லது நடந்தா, அது மேலே காறி உமிழ்வது.

கடந்த 10-15 ஆண்டுகளாகக் குடிமைப்பணி தேர்வுகளில், தமிழ் மாணவர்களின் வெற்றி சதவிகிதம் குறைந்துகொண்டே வந்தது. அது, ‘நான் முதல்வன் திட்டம்’, வழியாக மீண்டும் உயரத் தொடங்கியிருக்கிறது. அதிலும், இந்த ஆண்டு, முதல் 10 இடங்களில், இரண்டு தமிழ்நாட்டு மாணவர்கள் தேறியது கொண்டாடத்தக்க வெற்றியாகும். இதைப் பாராட்ட வேண்டியது நம் கடமையாகும். ஆனால், இங்கே சிலருக்கு வயிறு எரிகிறது.

முன்னாடி ப்ரில்லியன்ட் டுட்டோரியல்ஸ் இருந்துச்சு. இப்ப அரசு டுட்டோரியல் நடத்துதுன்னு நக்கலடிச்சிருக்காங்க. (குடிமைப்பணி தேர்வுகளுக்கு தில்லியில் ராவ்’ஸ் ஸ்டடி சர்க்கிள் தான் இருக்கும்.) நான் 1992-இல் தேர்வு எழுதி மெயின்ஸ் பாஸ் செய்தபோது, நேர்முகத் தேர்வுக்காக ஒரு கிளாஸ் அட்டெண்ட் பண்ணியிருக்கேன். அப்போ, ப்ரில்லியன்ட் டுட்டோரியல்சில் அதற்கான வகுப்புகள் கிடையாது) உண்மைதான்.

முன்பு ப்ரில்லியன்ட் டுட்டோரியல்ஸ் இருந்துச்சு, அங்கே சேர்ந்து படிக்கப் பணம் கட்டணும். தங்கும் வசதிகள் கிடையாது. அதனால, நகர்ப்புறத்தைச் சேர்ந்த உயர் வர்க்க/சாதி மாணவர்கள் மட்டுமே படிக்கும் வாய்ப்பு இருந்துச்சு. ஆனால், அரசு டுட்டோரியல்ல தங்கிப் படிக்க அரசே பண உதவி தருது. ஒவ்வொரு நிலையைத் தாண்டும்போதும் நிதி உதவி அதிகரிக்குது. இதன் விளைவாக, தமிழ்நாட்டில் ஆர்வமும் திறமையும் உள்ள எல்லா சாதி/வர்க்க மாணவர்களுக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. டுட்டோரியல்தான்... அரசு டுட்டோரியல். இதுக்குப் பேரு சமூக நீதி.

இதை இவங்களால் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. வயிறெரிந்தே சாகட்டும் என விட்டுவிட வேண்டியதுதான்" எனப் பதிவிட்டுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்



### மகள்களுக்குத் தலைவரின் வாழ்த்து!



எஸ்.அப்பாசாமி

2014-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளுக்காக ஈரோட்டுக்கு வருகைதந்தார். அப்போது, முன்னாள் அமைச்சர் அண்ணன் என்.கே.கே.பி.ராஜா அவர்களின் ஏற்பாட்டில், என் இரு மகள்களையும் தலைவரிடம் அழைத்துச் சென்று, பிறந்தநாள் வாழ்த்துப் பெற்ற தருணம் என்றும் மறக்க முடியாதது.

– எஸ்.அப்பாசாமி, மாநகர தி.மு.க. பிரதிநிதி, பெரியசேமூர் பகுதி, ஈரோடு மாநகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### விடியலுக்குக் காத்துக்கிடந்தோர்...

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் 2-வது மாநில மாநாடு மே மாதத்தில், கடும் கோடையில் நான்கு நாட்கள் நடைபெற்றது. மே 17-ஆம் தேதி தொடங்கிய மாநாட்டுக்கு, முதல் நாளில் இருந்தே கழகத் தோழர்கள் திரண்டனர். ‘திருச்சியில் எங்கு திரும்பினாலும் கழகத் தோழர்கள்தான். கிடைத்ததை உண்டு, அகப்பட்ட இடத்தில் சுருண்டுகிடந்து, அடுத்த நாள் எப்போது விடியும் என ஆவலோடு கிடந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்துக்கும் மேல் இருந்தனர்’ எனப் பதிவு செய்தது ‘திராவிட நாடு’.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131